# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்கள் ஜெர்மனியிலுள்ள மாநாட்டுத் திடலில் 24.06.2011 அன்று

## ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

ஜெர்மனியின் இன்னொரு ஆண்டு மாநாட்டைப் பார்ப்பதற்கும் கேட்பதற்கும்உரிய நல்வாய்ப்பை அல்லாஹ் மீண்டும் நமக்கு வழங்கியுள்ளான். அல்ஹம்துலில்லாஹ்! ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியிருப்பது போன்று நமது பிறப்பின் நோக்கத்தைப் புரிந்தவாறு இறைவனுடன் ஒரு குறிப்பான தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்காகவே நாம் இந்த மாநாட்டை நடத்துகிறோம். வருடத்தில் 3 நாட்கள் முழுக்க முழுக்க இறைவனுக்காகவே கழிப்பதற்காக நாம் ஒன்றுகூடியுள்ளோம். அறிவார்ந்த ஆன்மீக சூழலில் இந்த நாட்களைக் கழித்தவாறு நமது மார்க்க அறிவில் நாம் முன்னேற வேண்டும். உங்களது தர்பிய்யத் பற்றி நீங்கள் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். இங்கு கூறப்படும் விஷயங்களைக் கேட்பதற்கு உங்களது நிலைமைகள் பற்றியும் பார்க்க வேண்டும். அல்லாஹ்வும் அவனது தூதர் (ஸல்) அவர்கள் கூறிய போதனைகளுக்கேற்ப நாம் நமது பலவீனங்களிலிருந்து விடுபட்டு இருக்கின்றோமா அல்லது அதற்காக முயற்சி செய்கின்றோமா என்று பார்க்க வேண்டும். மாநாட்டின் ஆன்மீக சூழலில் இறைவன் மற்றும் அவனது தூதரின் கூற்றுக்களைக் கேட்டு ஆன்மீகத்தில் முன்னேற முயற்சி செய்யுங்கள். சில நேரங்களில் சின்னச்சின்ன விஷயங்கள் கூட தர்பிய்யத் மற்றும் ஆன்மீகத்தில் நாம் முன்னேறச் காரணமாக அமைந்து விடும். இந்த சூழலில் நாம் இருக்கும் போது மற்றவர்களிடம் காணப்படும் நல்ல விஷயங்களை நமது உணர்வுகளை நன்மைகளின் பக்கம் தூண்டக் கூடியதாக இருக்கும். ஆனால், சில பாக்கியமிழந்தவர்கள் மாநாட்டிலிருந்தும் ஆன்மீக சூழலிலிருந்தும் எந்தப்பலனையும் பெறுவதில்லை என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. தங்களது உலக நோக்கங்களைப் பெறுவதற்காக மட்டுமே அவர்கள் வருகின்றார்கள். அப்படிப்பட்டவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்திருப்பதாக வாதித்தாலும் உண்மையில் அவர்கள் அவர்களது போதனைகளை விட்டும் விலகி தூரத்தில் சென்று விட்டார்கள். எனவே இங்கு துஆ மற்றும் இஸ்திக்ஃபார் செய்தவாறு இந்த நாட்களைக் கழியுங்கள். இப்படிப்பட்ட பலவீனமான இயல்புடையவர்கள் குறைவாக இருந்தாலும் மற்றவர்கள் செய்யும் துஆக்கள் இவர்களது பலவீனத்தை அகற்றுவதற்குக் காரணமாக அமையலாம். மாநாட்டில் கலந்து கொள்பவர்கள் அவர்கள் பக்கத்தில் அமர்ந்திருப்பவர்கள் ஆகியோரில் நிலை நல்லதாக ஆகிவிடும். எனவே துஆக்களுடன் இந்த நாட்களைக் கழியுங்கள். ஷய்த்தான் மனிதனை அவனது நல்ல நோக்கங்களில் இருந்து அகற்றுவதற்காக எப்போதும் முயற்சி செய்கின்றான். அல்லாஹ் நம்மை அவனிடமிருந்து பாதுகாப்பானாக! மாநாட்டில் கலந்து கொள்கின்ற அனைவரும், மாநாட்டில் பணிபுரியும் அனைவரும் அவர்கள் எந்தத் துறையில் டியூட்டி கொடுத்துக் கொண்டிருந்தாலும் அவர்கள் துஆ செய்தவாறும் தரூது ஓதியவாறும் இஸ்திக்ஃபார் செய்தவாறும் ஷய்த்தானின் தீங்கிலிருந்து தப்பிப்பதற்காக முயற்சி செய்ய வேண்டும்.

இந்த வருடம் இந்த புதிய இடத்தில் ஜெர்மனி அஹ்மதிய்யா ஜமாஅத் மாநாட்டை நடத்துகிறது. எவ்வாறு மான்ஹைமன் ஜமாஅத்தின் நல்ல தாக்கம் கடந்த 25 வருடங்களில் அங்கு மாநாட்டை நடத்தும்போதெல்லாம் வெளிப்பட்டதோ, அந்த நகரவாசிகள் மீதும் சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்த நியமிக்கப்பட்டவர்கள் மீதும் ஒரு நல்ல தாக்கம் இதனால் ஏற்பட்டதோ அதை விட சிறந்த தாக்கம் இந்த நகரவாசிகள், சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்த நியமிக்கப்பட்டவர்கள் மீது ஏற்பட முயற்சி செய்யுங்கள். அதன் மூலம் இந்த நல்ல முன்மாதிரிகள் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் உண்மையான தூதுச் செய்தியை பிறருக்கு எட்ட வைப்பதற்குரிய வழியாக அமைய வேண்டும். உதாரணமாக, பெரும் எண்ணிக்கையில் ஆசியாவிலுள்ள மக்களை தங்களது ஹோட்டல்களில் தங்க வைக்கின்ற முதல் சந்தர்ப்பமாக இது இருக்கின்றது. இன்றைய நாட்களில் இஸ்லாத்தைப் பற்றிய ஒரு தவறான படம் முஸ்லிம் நாடுகளால் காட்டப்பட்டுள்ளது. இதனால் ஹோட்டல்களின்

எஜமானர்களுக்குக்கூட இவ்விஷயத்தில் சிறிது தயக்கம் இருந்தது. அப்போது காவல்துறையினர் அவர்களிடம் எங்களது ஆய்விற்கேற்ப இவர்கள் அமைதி நிறைந்த ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள் என்று அவர்களுக்கு திருப்தி ஏற்படும் வகையில் கூறினார்கள். இதனால் எவ்வித கவலையும் கொள்ள வேண்டிய அவசியமில்லை என்று கூறினார்கள்.

எனவே இந்த நாட்கள் மாநாட்டுத் திடல் இருக்கின்ற இடத்தில் மட்டும் அல்லாமல் வெளியிலும் எங்கெல்லாம் அஹ்மதிகள் தங்கியிருக்கின்றார்களோ அங்கும் ஒரு நகரத்திலிருந்து இந்த நகரத்திற்கு வருகின்றவர்களும் அந்த இடங்களிலும் பொதுவாக எல்லா இடங்களிலும் தங்களது நல்ல முன்மாதிரியைக் காட்ட வேண்டும். அது அஹ்மதிய்யத்தின் தப்லீகிற்கு காரணமாக அமைய வேண்டும். உங்களது பைஅத் உடன்படிக்கையை நீங்கள் பேணுகின்றீர்கள் என்பதை வெளிப்படுத்தும் வகையில் உங்கள் முன்மாதிரி இருக்க வேண்டும். எவராவது உங்களுடன் கடுமையாக நடந்து கொண்டாலும் ஒரு அஹ்மதி தானும் அதே விதத்தில் நடக்கக் கூடாது. கடந்த கால அனுபவம் மூலம் நமக்குத் தெரிவது சிலர் தங்களது உலக நோக்கங்களுக்காக மட்டும் இங்கு வருகின்றார்கள். அவர்கள் சில நேரங்களில் தங்களது பழைய பகைமை உணர்வை உள்ளத்தில் இருத்தியவாறு மற்றவர்களுக்கு எதிராக தவறான செயல்களை செய்கின்றார்கள். மாநாட்டு அமைப்பாளர்கள் இவர்களுக்கு எவ்வித சலுகையையும் வழங்கமாட்டார்கள். அவ்வாறு வழங்கவும் கூடாது. ஆனால் இவ்வாறு ஒரு பிரிவினர் இழைக்கின்ற அநீதியை மற்ற பிரிவினர் பொறுமையுடன் சகித்துக் கொள்ள வேண்டும். இந்த நாட்களை இறைவனுக்காகவே கழிக்க நீங்கள் வந்துள்ளீர்கள். எனவே உங்களுடைய விஷயங்களை இறைவனிடம் ஒப்படைத்து விட வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணைந்திருப்பது அல்லாஹ்வின் அருளாகும். இந்த அருளுக்கு கண்ணியமளிப்பது ஒவ்வொரு உண்மையான அஹ்மதியின் கடமையாகும். இந்த ஜமாஅத்தில் இணைந்து தங்களிடம் தூய மாறுதலை ஏற்படுத்த சமுதாயங்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றன என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். இந்த விஷயத்தை பழைய அஹ்மதிகளும் மிகுந்த கவலையுடன் சிந்திக்க வேண்டும். இந்த மாநாட்டிலும் அல்லாஹ்வின் அருளால் பல புதிய அஹ்மதிகள் பல்வேறு நாடுகளிலிருந்து கலந்து கொள்கின்றார்கள். அவர்களது பார்வையில் அவர்களது செயல்களில் அவர்களது மனத்தூய்மையும் பற்றும் வெளிப்படும். எனவே பழைய அஹ்மதிகள் தங்களது ஈமானைப் பற்றியும் கவலைப்பட வேண்டும். புதிய அஹ்மதிகளுக்கும் நல்ல முன்மாதிரிகளைக் காட்ட வேண்டும். புதிய சமுதாயங்கள் வந்து உண்மையாக முஸ்லிம்களாக செயல்பட்டு அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசாகி விடும் போது பழைய அஹ்மதி குடும்பங்கள் உலகில் மூழ்கி தங்களது தான் என்ற அகந்தையில் மூழ்கி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களோடு இந்த அருள்களிலிருந்தும் புறக்கணிக்கப்பட்டவர்களாக ஆகிவிடக் கூடாது. இந்த சிந்தனையுடனும் துஆவுடனும் இந்த நாட்களைக் கழியுங்கள்.

இந்த முக்கியமான விஷயம் பற்றி கவனமூட்டிய பிறகு இப்போது நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சில சஹாபாக்களின் சில அறிவிப்புகளை உங்கள் முன் வைக்க விரும்புகின்றேன். சஹாபாக்களின் இந்த அறிவிப்புகள் ரிஜிஸ்டர் ரிவாயத்திலிருந்து எடுக்கப்பட்டவையாகும். அவற்றில் பல கருத்துக்கள் உள்ளன. சஹாபாக்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது கொண்டுள்ள பேரன்பு தொடர்பான சம்பவங்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் செய்துள்ள போதனைகள், சஹாபாக்கள் அவற்றை கேட்ட விதம், விருந்தோம்பல் தொடர்பான நிகழ்வுகள், சஹாபாக்களின் பரிமாற்றம், சகிப்புத்தன்மை ஆகியவை இந்த அறிவிப்புகளில் இருக்கின்றன. இந்த விஷயங்கள் சஹாபாக்களின் வாழ்க்கையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. இதில் அவர்களின் ஆன்மீக தர்பிய்யத் இருந்தது. மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது வைத்திருந்த நோக்கத்தினை அதிகப்படுத்தவும் செய்தார்கள். நான் கூறியது போன்று ஒரு சில சம்பவங்கள் விருந்தோம்பல் சம்பந்தப்பட்டவையாகும். அதனை இங்கு டியூட்டியில் உள்ளவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். ஒரு சில சாந்தம், தைரியமூட்டக்கூடியதும் ஆகும். எனவே இதனை மிகவும் கவனத்துடன் கேளுங்கள்.

**ஹஸ்ரத் கான் சாஹிப் ஸியாவுல் ஹக் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

இந்த எளியவனும் ஸய்யது சியாமுத்தீன் சாஹிப் அவர்களும், ஸய்யது நியாஸ் ஹுஸைன் சாஹிப் மர்ஹூம் ஆகிய நாங்கள் மூவரும் கல்கத்தா வழியாக பயணம் செய்து காதியான் வந்து சேர்ந்தோம். 1902 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இந்த சம்பவம் நடந்தது. காலை 10.00 அல்லது 11.00 மணி அளவில் வந்து சேர்ந்தோம். ளுஹர் தொழுகை சமயத்தில் மவ்லவி முஹம்மது அஹ்ஸன் சாஹிப் மர்ஹூம் அவர்கள் மூலமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை பள்ளிவாசல் வைத்து சந்தித்தோம். அதே நாளில் மக்ரிப் தொழுகைக்குப் பிறகு நாங்கள் மூவரும் அங்கு வந்திருந்த மற்றவர்களுடன் சேர்ந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சந்தித்தோம். சந்திப்பின் போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எனது பெயர் என்ன? என்று கேட்டார்கள். நான் ஸியாவுல் ஹக் என்று கூறினேன். காஃப் மிகவும் சரியாக அழுத்தமாக உச்சரித்தவாறு கூறினேன். அதைக் கேட்ட ஹுஸூர் அவர்கள் ஸியாவுல் ஹக் என்று கூறியவாறு காஃப் என்ற எழுத்தை சிறிய காஃப் -ல் உச்சரித்தவாறு கூறினார்கள். இவ்வாறு கேட்டது எனக்கு முதல் சந்தர்ப்பமாக இருந்தது. பஞ்சாபி மொழி பேசுபவர்கள் தங்களது பொதுவான பேச்சில் காஃப் என்ற எழுத்தை காஃப் என்றே கூறுவர். பிறகு ஹுஸூர் அவர்கள் மவ்லவி முஹம்மது அஹ்ஸன் சாஹிபிடம் இந்த மூவருக்கும் ஜமாஅத்தின் சில நூல்களைப் படிப்பதற்காக கொடுங்கள் என்று கூறினார்கள். அப்போது நான் ஃபத்ஹே இஸ்லாம், தவ்ஸிஹே மராம், இஸாலே அவ்ஹாம் ஆகிய நூல்களைப் படித்து விட்டேன் என்று கூறினேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நான் கூறியதைக் கேட்டு தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். ஒரிசாவைச் சார்ந்த எங்கள் மூவருக்கும் சோறு வழங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்யும்படி லங்கர் கானாவில் உள்ளவர்களிடம் வலியுறுத்திக் கூறினார்கள். நாங்கள் 7 நாட்கள் காதியானில் தங்கியிருந்தோம். ஒவ்வொரு நாளும் மக்ரிப் தொழுகைக்குப் பிறகு ஹுஸூர் அவர்களின் கால்களை பிடித்து விடுபவர்களுடன் நாங்களும் இணைந்து விட்டோம். ஆனால் காதிம்கள் அதிகமாக இருந்ததால் காலின் எந்தவொரு பகுதியும் எங்கள் கைகளில் கிடைப்பது அரிதாக இருந்தது. ஹுஸூர் அவர்களின் பாதங்கள் வலுவாக இருப்பது தெரிய வந்தது. ஒவ்வொரு நாளும் காலை சிற்றுண்டிக்குப் பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் நாங்கள் உலாவுவதற்காகச் செல்வோம். ஹுஸூர் மிகவும் விரைவாக நடந்தார்கள். எந்த அளவுக்கென்றால் அவர்களுடன் சேர்ந்து வந்த சிலருக்கு ஓட வேண்டியது வந்தது.

ஹுஸூர் அவர்களுக்காக குடை பிடிக்கும் பெருமை மவ்லவி அபூஸயீது சாஹிப் அவர்களுக்கு கிடைத்தது. ஒரு நாள் நான் ஹுஸூர் அவர்களிடம் நாங்கள் எங்கள் முஹல்லாவிலுள்ள பள்ளிவாசலில் எப்படி தொழுகையை நிறைவேற்றுவது? என்று கேட்டேன். அதற்கு அஹ்மதி அல்லாதவர்கள் அங்கு நீங்கள் தொழுவதற்கு அனுமதி வழங்குவார்களா? என்று ஹுஸூர் அவர்கள் என்னிடம் கேட்டார்கள். அதற்கு நான் எங்களது முஹல்லாவிலுள்ள பள்ளிவாசலில் நாங்கள் தொழுவதிலிருந்தும் எங்களை யார் தடுக்க முடியும்? என்று கேட்டேன். அதற்கு ஹுஸூர் அவர்கள் எவ்வித தடையும் இல்லையென்றால் தனியாக தொழுது கொள்ளுங்கள். தடை இருந்தால் தொழ வேண்டாம் என்று கூறினார்கள். எதிர்ப்பு இந்த அளவு இருக்கும் என்று ஆரம்பத்தில் எங்களுக்கு தெரியாது. முஹல்லாவிலுள்ள பள்ளிவாசலில் தொழுவது ஒருபுறமிரும் இருக்கட்டும். அதற்குள் நுழைவதற்கு எங்களுக்கு தடை விதிக்கப்பட்டது. எங்கள் சகோதரர்களுடன் உள்ள தொடர்பும் முறிந்து விட்டது. காஃபிர், வழிகேடர், வழிகெடுப்பவர் போன்ற பட்டங்கள் எங்களுக்கு கிடைத்தது.

ஆரம்பத்தில் மக்கள் பைஅத் செய்வதற்காக வந்த போது அவர்களுக்கு இந்த அளவு வலுவான எதிர்ப்பு இருக்கும் என்பது தெரியாது. இப்படிப்பட்ட எதிர்ப்பு இன்னும் இருக்கின்றது. அல்லாஹ் உலகில் எல்லா இடங்களிலும் பள்ளிவாசல்களைக் கட்டுவதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்கியுள்ளான். ஜெர்மனியில் இந்த வருடம் 4 பள்ளிவாசல்களை கட்டுவதற்கான நல்வாய்ப்பை அதாவது அவற்றை முறையாக பள்ளிவாசலாக மாற்றுவதற்கான சந்தர்ப்பத்தை அல்லாஹ் உங்களுக்கு வழங்கியுள்ளான்.

**ஹஸ்ரத் நிஸாமுத்தீன் சாஹிப் சியால்கோட்டி அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஒருமுறை மாநாட்டிற்கு வந்திருந்த நாங்கள் மாநாடு முடிந்ததும் எங்கள் வீட்டிற்கு திரும்பிச் செல்வதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் அனுமதி பெறுவதற்காகச் சென்றோம்.

அவர்களிடம் விடைபெற்று உட்புற கதவு வழியாக வந்து கொண்டிருந்தோம். அப்போது முல்தானைச் சார்ந்த ஒரு நபரும் எங்களுடன் இருந்தார். அவர் திரும்பிச் செல்வதற்கு அனுமதி பெற்ற பிறகு தனது முல்தானிய மொழியில் ஹஸ்ரத் எனக்கு ஏதாவது வஸிபா கூறுங்கள் என்றார். ஹுஸுர் புன்னகைத்தவாறு தரூது ஷரீஃப் அதிகமாக ஓதுங்கள். இதுதான் வஸிபா என்று கூறினார்கள். இந்த நாட்களிலும் குறிப்பாக இந்த வஸிபாவைத் தான் அதிகமாக ஓத வேண்டும்.

**அவர் தொடர்ந்து கூறுகின்றார்:**

வசந்த காலத்தில் தனது நண்பர்களுடன் எங்களையும் அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள ஒரு தோட்டத்திற்குச் சென்றார்கள். தனது ஊழியர்களிடம் இந்த இரண்டு கூடைகளையும் நிரப்பிக் கொண்டு வாருங்கள் என்று ஹுஸுர் கூறினார்கள். பேரிக்காய் நிரம்பிய கூடைகள் அவர்களுக்கு முன்னால் வைக்கப்பட்டன. அதிலிருந்து அவர்களும் எடுத்து சாப்பிட்டார்கள். சஹாபாக்களும் சாப்பிட்டார்கள். இந்த பார்ட்டியில் அதிகமான சஹாபாக்கள் அவர்களுடன் இருக்கவில்லை. 15 அல்லது 20 பேர் தான் இருந்தார்கள். ஒருமுறை குளத்தின் கரையில் மணல்கள் நிரப்பி ஒரு பிளாட்ஃபார்ம் போன்று உருவாக்கப்பட்ட இடத்தில் ஆண்டு மாநாடு நடந்தது. அந்த மாநாட்டில் மவ்லவி ஃபுர்ஹானுத்தீன் சாஹிப் அவர்கள் இரும்பால் ஆன ஒரு குவளையை தனது தோல்களில் தொங்கவிட்டவாறு அதில் தண்ணீர் நிரப்பி மக்களுக்கு குடிப்பதற்காக கொடுத்து வந்தார்கள். இவரது வழிமுறை எவ்வளவு கடினமாக இருந்திருக்கின்றது என்று பாருங்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: மவ்லவி சாஹிப் மர்ஹூம் அவர்கள் குடிப்பதற்காக தண்ணீர் கொடுத்துக் கொண்டே ஆட ஆரம்பித்தார்கள். அங்கிருந்தவர்களிடம் நான் யார்? என்று கேளுங்கள். நான் ஏன் ஆடுகின்றேன்? என்பதையும் கேளுங்கள் என்று கூறினார்கள். நண்பர்களில் ஒருவர் அதைப் பற்றி நீங்களே கூறுங்கள் என்றார். அப்போது மவ்லவி சாஹிப் அவர்கள் நான் மஸீஹின் கடைநிலை ஊழியராவேன். நான் மஸீஹின் கடைநிலை ஊழியராக இருக்கின்றேன் என்ற மகிழ்ச்சியில் ஆடுகின்றேன் என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் மியான் அமீருத்தீன் சாஹிப் அஹ்மதி குஜராத்தி அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

நான் ஒருமுறை கடனாளியாக இருக்கின்றேன் என ஹஸ்ரத் சாஹிபிடம் முறையீடு செய்தேன். அதற்கு ஹுஸுர் அவர்கள் நீங்கள் அதிகமாக தரூது –ரீப் ஓதுங்கள் என்று கூறினார்கள்.

பலரும் தங்கள் வாழ்வாதாரம் தொடர்பான பிரச்சனைகளை எனக்கு எழுதுகின்றார்கள்: இவர்களைப் போன்றவர்களுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஐவேளை தொழுகைகளை தொழுங்கள். அதிகமாக தரூது ஓதுங்கள் என்ற அறிவுரையை கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அன்னாருக்கு அறிவுரை கூறியவாறு கூறினார்கள். அதிகமாக தரூது ஷரீஃப் ஓதுங்கள். அதிகமாக இஸ்திக்ஃபார் செய்யுங்கள். இதுவே எனது வஸிபாவாகும் என்றார்கள். எனது கருணைமிக்க எஜமானை எனக்கு இதன் மூலம் பரக்கத்தை வழங்கினான். நான் கடனிலிருந்து முழுமையாக விடுபட்டு தூய்மையடைந்தேன். நான் காதியானுக்கு திரும்பி வந்த சமயத்தில் சின்ன பள்ளிவாசல் அதாவது மஸ்ஜதித் முபாரக் பெரிய பள்ளிவாசலாக ஆகியிருந்தது. அந்த சமயத்தில் ஒரு ஸஃப்பில் 6 பேர்கள் நிற்க முடிந்தது. நான் அங்கிருந்த ஜன்னலுக்கு முன்னால் தொழுகை சமயங்களில் அமர்ந்திருப்பேன். அந்த ஜன்னல் வழியாகத்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பள்ளிவாசலுக்கு வருவார்கள். அவர்கள் தொழுகைக்காக வரும்போது நான் உடனடியாக எழுந்து தொழுகையில் அவர்களுக்கு இடப்பக்கம் நிற்பேன். இந்த சமயத்தில் பள்ளிவாசலுக்கு ஒட்டியிருந்த அந்த அறையில் ஹஸ்ரத் சாஹிபுடன் சில விருந்தினர்களும் இருந்தார்கள். அவர்களது எண்ணிக்கை 5 நபர்களுக்கு அதிகமாக இருந்ததில்லை. இந்த அறையில் தான் சோறு அல்லது வேறு ஏதாவது உணவை அவர்கள் தங்களது கைகளாலேயே எங்களுக்கு வழங்கி வந்தார்கள். என் கண் முன்னால் எல்லா முன்னறிவிப்புகளும் நிறைவேறியது. நான் அதற்கு சாட்சியாக இருக்கின்றேன்.

தொடர்ந்து கூறுகின்றார்கள். பிளேக் நோய் தொடர்பாக மாநாட்டில் பேசப்பட்ட சமயத்தில் நானும் அதில் கலந்து கொண்டேன். காதியானின் கிழக்குப் பக்கத்திலுள்ள அந்த மாநாட்டில் 300 அல்லது 400 நபர்களே கலந்து கொண்டனர். அல்லாஹ்வே நன்கறிவான். இதற்குப் பிறகு ஜமாஅத் வளர்வதை நான் பார்த்தேன். பிறகு மாநாடு டிசம்பர் மாதத்தில் தொடர்ந்து நடைபெற்று வரும் அந்த நாட்களும் வந்தன. பிறகு மிகவும் அதிகமாக மக்கள் வர ஆரம்பித்தார்கள்.

ஒரு நாள் இரவு உணவு பரிமாறுவதற்காக ஒவ்வொரு ஜில்லாவைச் சார்ந்த நபர்களும் தன்னந்தனியாக அமர்த்தப்பட்டு அவர்களுக்கு உணவு பரிமாறப்பட்டது. அப்போது குஜரன்வாலாவைச் சேர்ந்தவர்கள் ஒரு அறையில் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். வெளிக்கதவு மூடப்பட்டிருந்தது. நான் பசியால் வாடிய நிலையில் அந்த இடத்திற்குச் சென்றேன். அப்போது என்னை அந்த அறையில் யாரும் நுழைய விடவில்லை. நான் திரும்பி வந்து பசியுடன் தூங்கினேன். இரவில் ஹஸ்ரத் சாஹிபிற்கு யா அய்யுஹன்னபிய்யு அத்இமுல் கானிஹ் வல் முஃதர் என்று இல்ஹாம் வந்தது. இவ்வாறு இவர் எழுதியுள்ளார். ஆனால் மற்ற அறிவிப்புகளில் வந்துள்ள அசல் இல்ஹாமிய சொற்கள் யா அய்யுஹன்னபிய்யு அத்இமில் ஜாய பல்முஃதர் அதாவது நபியே! பசித்திருப்பவர்களுக்கும் தேவையுடையவர்ளுக்கும் உணவளிப்பாயாக என்பதாகும். காலையில் ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் உணவு எவ்வாறு வழங்கப்படுகிறது? என்று கேட்டார்கள். ஒரு ஜில்லாவைச் சார்ந்த மக்கள் வந்து சாப்பிட்டு விட்டுச் சென்ற பிறகு அடுத்த ஜில்லாவைச் சார்ந்தவர்களை அழைக்கின்றோம் என்று பதில் கூறப்பட்டது. எனக்கு முன்னால் வைத்து அப்போது ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் கதவைத் திறந்து விடுங்கள். யார் வந்தாலும் அவரைச் சாப்பிட விடுங்கள் என்று கூறினார்கள்.

**தில்லியைச் சேர்ந்த ஹகீம் அப்துஸ் ஸமது சாஹிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

நான் 1907 -ல் காதியான் வந்தேன். அஸர் நேரத்திற்குப் பிறகு சாப்பிடுவதற்காக நாங்கள் லங்கர்கானாவிற்குச் சென்ற சமயத்தில் சிலர் கதவுக்கு முன்னால் நின்று கொண்டிருந்தார்கள். நானும் அங்கு நின்று கொண்டிருந்தேன். பிறகு கதவு திறக்கப்பட்டதும் மக்கள் உள்ளே நுழைய முற்பட்டார்கள். ஒரு பையன் அவர்களை வெளியே தள்ளி விட்டு கதவை மூடி விட்டார். அந்த மக்கள் மிகவும் வெட்கப்பட்டு திரும்பிச் சென்று விட்டார்கள். நான் சிறிது நேரம் கழித்து மீண்டும் சென்ற போது கதவு திறந்து இருந்தது. சுபுஹ் தொழுகைக்குப் பிறகு ஹஸ்ரத் சாஹிப் வந்துள்ளார்கள் என்பது தெரிய வந்தது. மஸ்ஜித் முபாரக்கின் பழைய பகுதியில் நான் நின்று கொண்டிருந்தேன். ஹஸ்ரத் சாஹிப் மேல் மாடியிலிருந்து இறங்கி வந்தார்கள். அங்கு மிகப்பெரிய கூட்டம் கூடியிருந்தது. ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் நேற்று நடந்ததென்ன? என்றும் நேற்று சண்டை நடந்ததா? என்றும் கேட்டார்கள். அப்போது முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் சில கண்ணியமிக்க பெரியவர்கள் உள்ளே செல்ல விரும்பினார்கள். பணியில் உள்ளவர்கள் தவறிழைத்துள்ளனர். ஒரு பையன் இவர்களை வெளியே தள்ளி விட்டு லங்கர் கானாவின் கதவை அடைத்து விட்டார். இந்த கண்ணியமிக்க மக்கள் வெறுப்படைந்து தத்தமது இடத்திற்குச் சென்று விட்டனர். பிறகு அவர்களுக்கு உணவு அனுப்பப்பட்டது. சிலர் சாப்பிட்டார்கள். சிலர் சாப்பிடவில்லை என்று எனக்கு தெரிய வந்தது என்று கூறினார்கள். இதைக் கேட்ட ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் எந்த மக்களின் தவற்றின் காரணமாக இந்த செயல்கள் நடந்ததோ அவர்கள் வெட்கப்பட வேண்டும். எந்த மக்களின் அழுகுரலும் முறையீடும் வானத்தில் கேட்கப்பட்டதோ அந்த மக்கள் நற்பேறு பெற்றவர்கள் ஆவர் என்று கூறினார்கள். பிறகு கூறினார்கள்: இன்றிரவு அல்லாஹ் நம்மிடம் இந்த சொற்களில் உரையாடினான். இதுபோன்று இதற்கு முன்னர் அவன் பேசவில்லை. அல்லாஹ் கூறினான்: யா அய்யுஹன்னபிய்யு அத்இமுல் ஜாய பல் முஃதர் – நபியே! நீ பசித்தவருக்கும் நிம்மதியிழந்தவருக்கும் உணவளிப்பாயாக! ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் இந்த சொற்களை இறைவன் அவற்றை நிறைவேற்றுவதற்காகவே கூறியுள்ளான் என்றும் கூறினார்கள். அறிவிப்பாளர் கூறுகின்றார்:

அப்போது ஹஸ்ரத் சாஹிபின் இந்த இல்ஹாம் பற்றி எனக்கு முழுமையாகப் புரியவில்லை. இப்போது அது எனக்கு புரிகின்றது. மக்கள் ஹஸ்ரத் சாஹிபின் உயர் தகுதியை குறைப்பதற்கு முயற்சி செய்வார்கள். ஆனால் அல்லாஹ்வின் பார்வையில் அவர்கள் முழுமைபெற்ற நபியாவார்கள். இது ஆண்டு மாநாட்டின்

போது நடந்த சம்பவமாகும். ஸய்யிதா மர்யம் பேகம் சாஹிபா அவர்கள் இன்றிருந்து வரும் அந்த இடத்தில் அப்போது லங்கர் கானா இருந்தது.

ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நபி ஆக இருக்கின்றார்கள் என்பதைப் பற்றி நான் ஒரு குத்பா முழுவதும் கூறியிருந்தேன். சிலர் இவ்விஷயத்தை தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். சிலர் இவ்விஷயத்தில் மற்றவர்களுக்கு முன்னால் தங்கள் கோழைத்தனத்தை வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்கள். அல்லது அவர்களின் கூற்றுக்களுக்கு ஆமாம் போடுபவர்களாக இருந்திருக்கின்றார்கள். விவாதத்தின் போதும் இவ்வாறு நடந்துள்ளது. அப்படிப்பட்டவர்கள் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அல்லாஹ் அவர்களை நபி என்றே அழைத்துள்ளான். அல்லாஹ்வின் அருளால் அவர்கள் நபியாவார்கள். ஆனால் ஷரீஅத்தைக் கொண்டு வராத நபியாவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றி வந்த நபி ஆவார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அன்னார் முழுமையான பேரன்பு கொண்டிருந்தார்கள்.

**தொடர்ந்து அறிவிப்பவர் எழுதுகின்றார்:** எவர்கள் வெளியில் தள்ளப்பட்டார்களோ அவர்கள் திரும்ப சென்று விட்டார்கள். மேலும் அவர்கள் கண்ணீர் வடித்தார்கள். தங்களை அறியாமலேயே அவர்களது நாவிலிருந்தும் எஜமானனே! நாங்கள் இங்கு சாப்பிடுவதற்கு வரவில்லையே! மாறாக உனது கட்டளையை ஏற்று நடந்து உனது மஸீஹின் வீட்டிற்கே நாங்கள் வந்தோம் என்ற சொற்கள் வெளி வந்தன.

எனவே பணியில் உள்ளவர்கள் எப்போதும் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும்.

**சவுத்ரி அப்துல் அஸீஹ் சாஹிப் அஹ்மதி Pensioner அவர்கள் எழுதுகின்றார்கள்:**

ஹஸ்ரத் சாஹிபின் இறுதி நாட்களான 1907 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற மாநாட்டில் நான் கலந்து கொண்டேன். 9.00 மணி அளவில் ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தார்கள். ஹுஸுர் அவர்கள் மவ்லவி நூருத்தீன் சாஹிப் அவர்களை குறிப்பாக அழைத்து அவர்களிடம் இன்று காலம் தாழ்த்தி வந்த விருந்தினர்களுக்கு உணவு கிடைக்கவில்லை. அவர்கள் பசியுடன் இருக்கின்றார்கள். ஏனென்றால் அவர்களது முறையீடு இறைவனின் அர்ஷை சென்றடைந்து விட்டது என்றார்கள். அதைக் கேட்ட மவ்லவி சாஹிப் அவர்கள் ஹுஸுர் நீங்கள் கூறுவது சரி தான். உண்மையிலேயே இவ்விஷயத்தில் கவனக்குறைவு ஏற்பட்டு விட்டது என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் 4 அல்லது 5 பேர் கொண்ட ஒரு கமிட்டியை ஏற்படுத்த வேண்டும். அவர்கள் இரவு முழுவதும் வரும் விருந்தினரை கண்காணிப்பதுடன் அவர்களது உணவிற்கான ஏற்பாட்டையும் செய்ய வேண்டும். இதனால் இனி சகோதரர்களுக்கு எவ்வித சிரமமும் ஏற்படக்கூடாது என்று கூறினார்கள்.

**மியான் கைர் முஹம்மது சாஹிப் அவர்களின் மகன் மியான் அல்லாஹ் ரக்கே சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:**

1903 அல்லது 1904 ஆம் ஆண்டு நடந்த சம்பவம் இது. நான் காதியானுக்குச் சென்றிருந்தேன். அப்போது பெருநாளாக இருந்தது. அப்போது லங்கர் கானாவில் உணவு பரிமாறப்பட்டு வந்தது. அங்கு சிறப்பிற்குரிய விருந்தினர்கள் மற்றும் பொதுவான விருந்தினர்கள் என்று பாகுபாடு காட்டும் திட்டம் தீட்டப்பட்டது. அதற்கேற்ப உணவு பரிமாறப்பட வேண்டும் என்றும் பேசப்பட்டது. எனது நிய்யத்தில் வித்தியாசத்தை நான் உணர்ந்தேன்.

அதாவது உடனடியாக அவருக்கு தப்பெண்ணம் உருவாகி விட்டது. வாக்களிக்கப்பட்ட மஹ்தி, ஹகமன் அதலன் – நெறி நீதி தீர்ப்பவர் ஆக இருப்பார். ஆனால் இப்போது இந்த லங்கர் கானாவில் இத்தகைய பாகுபாடு எப்படி உருவானது? அங்கு சமநிலை இல்லையே என்று நான் சிந்தித்தேன்.

காலையில் நான் மஸ்ஜித் முபாரக்கிற்கு சென்றேன். பாங்கு சொல்வதற்கு முன்னர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அங்கு வந்தார்கள். வந்தவுடன் மவ்லவி நூருத்தீன் சாஹிப் எங்கே? என்று

கேட்டார்கள். நான் இங்கிருக்கின்றேன் ஹுஸூர் என்று மவ்லவி சாஹிப் கூறினார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இரவில் அல்லாஹ் என்னிடம் விரல் நுனி அளவு கூட உமது லங்கர் கானா ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஏனென்றால் அதில் பாகுபாடு காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு நடந்து கொண்டவர்களை தனியாகப் பிரித்து காதியானில் இருந்தும் அவர்களை 6 மாதங்களுக்கு வெளியேற்றிவிட வேண்டும் என்று கூறினார்கள்.

எவர்கள் விருந்தினர்களுக்கிடையே பாகுபாடு காட்டினார்களோ அவர்களை அந்தப் பணியிலிருந்து அகற்றியதுடன் மட்டுமின்றி காதியானிலிருந்தும் ஆறு மாதங்களுக்கு அவர்களை வெளியேற்றி விட்டார்கள். இந்த அளவு அன்னார் கடுமையாக நடந்து கொண்டார்கள்.

**தொடர்ந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:**

அவர்களின் இடத்தில் நல்லியல்பு கொண்ட மக்களை நியமிக்க வேண்டும். அவர்கள் நல்லவர்களாக இருக்க வேண்டும். காலை உணவு எனது வீட்டிற்கு கீழே பரிமாறப்பட வேண்டும். நானும் மியான் மஹ்மூது அவர்களும் மேலே இருந்து அதைப் பார்ப்போம்.

**அறிவிப்பாளர் கூறுகின்றார்:** எனக்கு ஏற்பட்ட தப்பெண்ணத்திலிருந்து நான் விடுபட்டேன். ஃபஜ்ர் தொழுகையின் போது அல்லாஹ்விடம் தவ்பா செய்தேன். இஸ்திக்ஃபார் செய்தேன். அல்லாஹ்வே! நான் தப்பெண்ணம் கொண்டேன். நீ என்னை மன்னிப்பாயாக! என்று துஆ செய்தேன்.

அதாவது ஒரு நபர் தவறிழைத்ததை வைத்து முழு அமைப்பையும் ஒருபோதும் தவறானது என்று கருதக்கூடாது.

மவ்லவி ஃபுர்ஹானுத்தீன் சாஹிப் ஜிஸ்லமி அவர்களைப் பற்றி மாணவர் மவ்லவி மெஹருத்தீன் சாஹிப் அவர்கள் இவ்வாறு அறிவிக்கின்றார்கள். மிர்ஸா சாஹிப் அவர்கள் பராஹீனே அஹ்மதிய்யா என்ற நூலை எழுதிய போது அதை மவ்லவி ஃபுர்கானுத்தீன் சாஹிப் அவர்கள் படித்து விட்டு இவ்வாறு கூறினார்கள்:

நான் அந்த நூலைப் படித்த பிறகு இதை எழுதிய நபர் எதிர்காலத்தில் உயர் தகுதி பெற்றவராக ஆகி விடுவார் என்று கருதினேன். எனவே அவரைப் பார்க்க வேண்டும் என நான் எண்ணினேன். அவரைப் பார்ப்பதற்காக நான் காதியான் வந்ததும் அவர்கள் ஹோஸ்யார்பூருக்கு சென்று விட்டார்கள் என்பது எனக்கு தெரிந்தது. மீண்டும் மீண்டும் இங்கு வருவது சிரமமான காரியம் ஆகும். எனவே, ஹோஸ்யார்பூர் சென்று அவரைப் பார்க்க வேண்டும் என்று எனக்குள்ளே கூறிக்கொண்டு அவர்கள் இருக்கும் இடத்தின் முகவரியைக் கேட்டேன். அப்போது ஒருவர் அவர் மாட்டு வண்டியில் திரும்பி வந்து கொண்டிருப்பார். அந்த வண்டியிலுள்ள அந்த காளை மாடு வெள்ளை நிறத்தை உடையது. வழியில் நீங்கள் அவர்களது முகவரியைக் கேட்டு தெரிந்து கொள்ளுங்கள் என்று கூறினார். நான் ஹோஸ்யார்பூர் சென்று சேர்ந்ததும் அங்கு ஹுஸூர் அவர்களின் ஊழியராக அப்போது மவ்லவி இஸ்மாயீல் பேக் சாஹிப் அவர்கள் இருந்தார்கள். ஹுஸூர் அவர்களுக்கு ஆங்கிலத்தில் வந்துள்ள இல்ஹாம்களை மொழிபெயர்ப்பதற்காக அவர் ஹோஸ்யார்பூர் சென்று கொண்டிருந்த போது வழியில் நான் அவரை சந்தித்தேன். மிர்ஸா சாஹிப் எங்கே? என்று அவரிடம் நான் கேட்டேன். அதற்கு அவர் நகரத்தில் தேடிப் பாருங்கள் என்று கூறினார். தனது முகவரியைக் கூற வேண்டாம் என ஹஸ்ரத் சாஹிப் தடை செய்திருந்தார்கள். அல்லது வேறு ஏதாவது விஷயமா என்று எனக்கு தெரியவில்லை. இறுதியில் நான் விசாரித்து அவர்களது வீட்டை சென்றடைந்தது வீட்டுக் கதவைத் தட்டினேன். ஒரு ஊழியர் வந்து யார்? என்று கேட்டார். ஜெஹ்லத்திலிருந்து ஃபுர்ஹானுத்தீனாகிய நான் மிர்ஸா சாஹிபை சந்திக்க வந்துள்ளேன் என்று கூறினேன். அதற்கு அந்த ஊழியர் இங்கேயே இருங்கள். நான் அவர்களிடம் அனுமதி பெற்று வருகின்றேன் என்று என்னிடம் கூறினார். அவர் அனுமதி பெற சென்ற சமயத்தில் எனக்கு பார்ஸி மொழியில் எங்கு நீர வர வேண்டுமோ அங்கு வந்து விட்டாய். இப்போது இங்கிருந்து செல்லக்கூடாது என்று இல்ஹாம் வந்தது. அந்த ஊழியரிடம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இப்போது அவரை சந்திக்க எனக்கு ஓய்வு நேரமில்லை. எனவே வேறொரு சமயத்தில் இங்கு வாருங்கள் என்று கூறி

அனுப்பினார்கள். ஊழியர் இதை என்னிடம் தெரிவித்த போது நான் அவரிடம் எனது வீடு மிகவும் தொலைவில் இருக்கின்றது. நான் இங்கேயே உட்கார்ந்திருக்கின்றேன். அவர்களுக்கு எப்போது நேரம் கிடைக்குமோ அப்போது அவர்களை சந்திப்பேன் என்று கூறினேன். ஊழியர் இதை கூறுவதற்காக ஹஸ்ரத் சாஹிபிடம் வந்த போது ஹஸ்ரத் சாஹிபிற்கு அரபியில் இல்ஹாம் வந்தது. அதன் பொருள் விருந்தாளி வந்துள்ளார். அவருக்கு விருந்தோம்பல் செய்ய வேண்டும் என்பதாகும். ஹஸ்ரத் சாஹிப் தனது ஊழியரிடம் உடனே சென்று கதவை திறக்கும்படி கட்டளையிட்டார்கள். நான் ஹுஸூரை சந்தித்த போது ஹுஸூர் மலர்ந்த முகத்துடன் என்னை சந்தித்தார்கள். மேலும் எனக்கு இப்படி இல்ஹாம் வந்தது என்று கூறினார்கள். நான் எனக்கு பார்ஸி மொழியில் இப்படி இல்ஹாம் வந்தது என்று கூறினேன்.

இவ்வாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்த பிறகு அன்னாருக்கு மிக உயர்ந்த தகுதியை அல்லாஹ் வழங்கினான்.

ஸதருத்தீன் சாஹிப் அவர்களின் மகன் மிஸத்திரி அல்லாஹ் தித்தா சாஹிப் அவர்கள் குர்தாஸ்பூரைச் சார்ந்தவர். அவர் கூறுகின்றார்:

ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் நமது நண்பர்கள் உங்களிடம் வந்தால் அவர்களுக்கு நல்ல முறையில் விருந்தோம்பல் செய்யுங்கள் என்று கூறுவார்கள். ஒரு மிகப்பெரும் பொறுப்பில் இருந்த ஒரு விருந்தாளி கோடை காலத்தில் காலை 8.00 மணிக்கு காதியான் வந்தார். ஹஸ்ரத் சாஹிப் சமையல்காரரிடம் இவருக்கு ஏதாவது உணவு இருந்தால் கொடுங்கள் என்று கூறினார்கள். சமையல்காரர் ஹுஸூர் இரவில் எஞ்சியிருந்த காய்ந்த ரொட்டிகளே உள்ளன என்று கூறினார். அதற்கு ஹுஸூர் பரவாயில்லை. அதைக் கொண்டு வாருங்கள் என்று கூறினார்கள். மேலும் நமது நண்பர்கள் எப்போது வந்தாலும் அவர்களுக்கு உணவளிக்க வேண்டும். உணவு தயாராக இல்லாத நிலையில் காய்ந்த ரொட்டிகள் தான் உள்ளன என்றால் அவற்றையே கொண்டு வாருங்கள் என்று கூறினார்கள். காய்ந்த ரொட்டிகள் கொண்டு வரப்பட்டன. ஹுஸூரும் அதை சாப்பிட்டார்கள். விருந்தாளிகளாகிய நாங்களும் அதை தான் சாப்பிட்டோம். அந்த விருந்தாளிகள் காதியானிலிருந்தும் தங்கள் கிராமமான அட்வாலுக்கு திரும்ப இருந்தார்கள். அப்போது ஹுஸூர் அவர்கள் காய்ந்த ரொட்டிகளை சாப்பிடுவது சுன்னத் ஆகும் என்று கூறினார்கள்.

**ஜலந்தரைச் சார்ந்த மவ்லவி குலாம் காதிர் சாஹிபின் மகன் மவ்லவி முஹம்மதலி சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

1906 ஆம் ஆண்டில் ஆண்டு மாநாடு மஸ்ஜித் அக்ஸாவில் நடந்தது. அப்போது மஸ்ஜிதின் வராண்டா மிகவும் விரிவுபடுத்தப்பட்டிருந்தது. அதன் தென்மேற்கிலுள்ள மூளையில் சுடப்படாத செங்கல்களால் கட்டப்பட்ட ஒரு இந்துவின் வீடு ஒன்று இருந்தது. இடம் போதாத காரணத்தால் சிலர் இந்த இந்துவின் வீட்டின் மேல் பகுதியில் ஏறி தொழுகைக்காக நின்றார்கள். அதைப் பார்த்து, வீட்டு எஜமான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களையும் ஜமாஅத்தையும் ஏசிப் பேச ஆரம்பித்தார்கள். அவர் இந்துவாக இருந்தார். ஏசிப்பேச ஆரம்பித்து விட்டார். தொழுகை முடிந்தவுடன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜமாஅத் சகோதரர்கள் பொறுமையாக இருக்க வேண்டும் என்று போதனை செய்தார்கள். அந்த வீட்டின் மேற்பகுதிக்கு யாரும் செல்ல வேண்டாம் என்று தடை விதித்தார்கள். மேலும் முன்னெச்சரிக்கையாக தடுப்புச் சுவரை ஒட்டியவாறு ஒரு உயரமான சுவர் கட்டப்பட்டது. சில நாட்களுக்குப் பிறகு அங்கு கம்பியால் வேலியும் போடப்பட்டது. யாரும் மறந்தும் கூட அந்த வீட்டின் மேற்பகுதிக்கு சென்று விடக்கூடாது என்பதற்காகவே அவ்வாறு செய்யப்பட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வந்த இல்ஹாமிற்கு ஏற்ப அந்த வீடு இறுதியில் நாசமடைந்து விட்டது. வீட்டின் எஜமானருக்கு அந்த வீட்டை விற்க வேண்டியது வந்தது. ஜமாஅத் அந்த வீட்டை வாங்கியது. இப்போது அது மஸ்ஜித் அக்ஸாவின் ஒரு பகுதியாக அமைந்து விட்டது. பள்ளியின் வராண்டவையொட்டி ஜமாஅத் அலுவலகங்கள் இருந்து வந்தன. இரண்டு வருடங்களுக்கு முன் மஸ்ஜித் அக்ஸா விரிவாக்கப்பட்ட போது அந்தப் பகுதியில் ஏறக்குறைய இரண்டாயிரம் பேர் அல்லது இரண்டாயிரத்து ஐநூறு பேர் இப்போது தொழ முடியம்.

**சவுத்ரி ஹமீது பக்ஸ் சாஹிப் அவர்களின் மகன் ஹஸ்ரத் சிராக் முஹம்மது சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மஸ்ஜித் அக்ஸாவில் ஒரு நீண்ட சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். அது ளுஹர் தொழுகைக்குப் பிறகு உள்ள நேரமாகும். நான் பள்ளிவாசலின் கிழக்குப் பக்கத்திலுள்ள சுவர் பக்கமாக அமர்ந்திருந்தேன். என்னுடன் எனது கிராமத்தைச் சார்ந்த முதன்மையான ஒரு எதிரியும் இருந்தார். அவருக்கு கீழ் கிராமத்தில் ஒரு நபர் இருந்தார். அவரும் கடுமையான எதிரியாவார். ஹுஸுர் அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருக்கும் போது அவர் மீண்டும் மீண்டும் தனது தலையை அசைத்தவாறு சுப்ஹானல்லாஹ் சுப்ஹானல்லாஹ் என்று கூறிக் கொண்டிருந்தார். அத்துடன் நான் இனி ஹுஸுரை எதிர்க்க மாட்டேன் என்றும் கூறினார். ஒரு சில நாட்களுக்குப் பிறகு நான் அவரை சந்தித்து இப்போது என்ன கருத்தில் உள்ளீர்கள்? என்று கேட்டேன். அதற்கு அவர் எனக்கு தெரியவில்லை. அந்த சமயத்தில் எனக்கு ஹுஸுர் அவர்களின் ஒவ்வொரு செயலும் சரியானதாக தெரிந்தது. ஆனால் இப்போது இல்லை என்று கூறினார். எவருக்கு அல்லாஹ் நேர்வழியை வழங்க விரும்புவதில்லையோ அவரது உள்ளம் இவ்வாறு கடினமாக ஆகிவிடுகின்றது.

**ஹஸ்ரத் மவ்லவி முஹம்மது இப்ராஹீம் சாஹிப் பகாபுரி அறிவிக்கின்றார்கள்:**

காதியானில் உள்ளவர்களை எப்படி சோதித்துப் பார்ப்பது என்று நான் எண்ணிக் கொண்டிருந்தேன். ஆலிம்களில் ஒரு பெரிய ஆலிமைப் பார்த்தேன். தான் மஹ்தி, மஸீஹ் என்று வாதம் செய்தவரையும் பார்த்தேன். ஆலிம்கள் நல்லொழுக்கத்தின் உயர் தரத்தில் இருந்தனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களோ நல்லொழுக்கத்தின் கடலாக இருந்தார்கள். பிறகு நான் இங்குள்ள பொதுமக்களின் நிலை எவ்வாறு இருக்கின்றது என்று பார்க்க விரும்பினேன். அதை சோதித்துப் பார்ப்பதற்காக நான் லங்கர் கானா சென்றேன். லங்கர் கானாவில் ஒரு சிறிய அண்டாவில் பருப்பும் இன்னொரு அண்டாவில் இறைச்சி குழம்பு இருந்தது. மியான் நஜ்முத்தீன் சாஹிப் பேரவி இதற்கு பொறுப்பாளராக இருந்து வந்தார். நான் மியான் நஜ்முத்தீன் சாஹிபிடம் உணவு கேட்டேன். அவர்கள் எனக்கு ரொட்டியும் பருப்பும் தந்தார்கள். அப்போது நான் எனக்கு பருப்பு வேண்டாம். இறைச்சி தாருங்கள் என்று கூறினேன். மியான் நஜ்முத்தீன் சாஹிப் பருப்பை அண்டாவில் கொட்டி விட்டு இறைச்சியை வழங்கினார்கள். பிறகு நான் இல்லை. இல்லை. பருப்பே இருக்கட்டும் என்று கூறினேன். அவர் உடனடியாக இறைச்சி குழம்பை அண்டாவில் கொட்டி விட்டு பருப்பை எனக்கு தந்தார். இவ்வாறு இறைச்சி, பருப்பு என மாற்றி மாற்றி கேட்டதற்கான காரணம் நான் பணியில் இருப்பவர்களின் நல்லொழுக்கத்தைப் பார்க்க விரும்பினேன். நான் அங்கு அமர்ந்து சாப்பிட்டேன். அங்கிருந்த பல்வேறு நிலையிலிருந்த மக்களிடம் பேசினேன். லங்கரிலிருந்த பணியாளர்களின் ஒவ்வொரு விஷயமும் அல்லாஹ்வின் பக்கம் எனக்கு கவனமூட்டக் கூடியவையாக இருந்தன. இதன் மூலம் எனது உள்ளத்தில் ஆழமான தாக்கம் ஏற்பட்டது. இப்படிப்பட்ட நன்மையைத்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தங்களுடன் இருந்த சஹாபாக்களிடம் உருவாக்கினார்கள்.

அறிவிப்பாளர் தொடர்ந்து கூறுகின்றார்: மறுநாள் காலை ஏறக்குறைய எல்லா அறைகளிலிருந்தும் திருக்குர்ஆன் ஓதுகின்ற சப்தம் வந்தது. ஃபஜ்ர் தொழுகையின் போது நான் சிறுவர்கள் தொழுவதைப் பார்த்தேன். இந்த காட்சி என் உள்ளத்தை ஈர்த்தது. எனது பார்வையில் அந்த காட்சி ஒன்றிவிட்டது. இதுபோன்ற காட்சிகள் குறிப்பாக மாநாட்டின் போதும் நமக்கு தென்பட வேண்டும். பணியில் இருப்பவர்களும் குறிப்பாக இவ்விஷயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது அவர்களின் ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு செயலும் உண்மையில் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்துள்ளார்கள் என்பதை பிரதிபலிக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

**ஹஸ்ரத் முன்ஸி மவ்வூது ஆலம் சாஹிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

நான் ஒருமுறை லாஹுரிலிருந்து காதியானுக்கு சென்றேன். நான் ஹஸ்ரத் சாஹிப் அவர்களுக்கு ஒவ்வொரு நாளும் கடிதம் எழுதிக் கொண்டிருந்ததால் ஹஸ்ரத் சாஹிபும் என் மீது பேரன்பு வைத்திருந்தார்கள்.

நான் லாஹுரிலிருந்து வந்த போதெல்லாம் அவர்களை சந்திக்கும் நற்பேற்றை அன்னார் எனக்கு வழங்கி வந்தார்கள். சில நேரங்களில் என்னை உள்ளே அழைத்துச் செல்வார்கள். சில நேரங்களில் என்னை சந்திப்பதற்காக தாமே வெளியில் வருவார்கள். ஒருமுறை நான் காதியான் சென்ற சமயத்தில் ஹுஸூர் அவர்கள் என்னை சந்திப்பதற்காக மஸ்ஜித் முபாரக்கிற்கு வந்தார்கள். மேலும் என்னிடம் நீங்கள் இங்கு இருங்கள். நான் உங்களுக்காக கொஞ்சம் உணவு கொண்டு வருகின்றேன் என்று கூறினார்கள். நான் ஜன்னலுக்கு எதிரில் அமர்ந்தேன். ஹுஸூர் உள்ளே சென்றார்கள். 15 அல்லது 20 நிமிடத்திற்குப் பிறகு தனது கையில் உணவுத் தட்டை ஏந்தியவாறு என்னிடம் வந்து, இதை இப்போதுதான் வீட்டிலிருந்து சமைத்துக் கொண்டு வந்துள்ளேன் என்று கூறினார்கள். ஒருபுறம் ஹுஸூருக்கு சிரமம் கொடுத்து விட்டோம் என்று நான் மிகவும் வெட்கப்பட்டேன். மறுபுறம் ஹுஸூரின் அருளுக்குரிய கைகள் மூலமாக இந்த தூய உணவு எனக்கு கிடைத்துள்ளது என்பதை நினைத்து உள்ளத்தில் மகிழ்ச்சியும் எனக்கு ஏற்பட்டது. பிறகு நான் உணவருந்திய பிறகு அதிக அளவு நன்றி செலுத்தினேன். இரவு இங்கேயே தூங்குங்கள் என ஹுஸூர் அவர்கள் கூறினார்கள். நான் மஸ்ஜித் முபாரக்கை ஒட்டியிருந்த ஒரு அறையில் தனியாக தூங்கினேன். ஆனால் எனக்கு இரவு முழுவதும் தூக்கம் வரவில்லை. நான் விழித்திருந்தேன். துஆ செய்து கொண்டிருந்தேன். இங்கு நான் தூங்குவது ஏதாவது கவனக்குறைவுக்கு காரணமாகி விடக்கூடாது என்று நான் நினைத்தேன். நான் தூங்கிக் கொண்டிருப்பது ஆன்மீகமான முறையில் ஹஸ்ரத் சாஹிபிற்கு தெரிந்து விடக் கூடாது என்ற அச்சத்திலேயே நான் விழித்திருந்தேன். மேலும் தரூது ஷரீஃப் ஓதிக் கொண்டிருந்தேன். துஆ செய்து கொண்டிருந்தேன். அதிகாலை நான்கு மணிக்கு ஹுஸூர் தாமே என்னிடம் வந்து இப்போது எழுந்திருங்கள். தொழுகைக்கான நேரம் வந்து விட்டது என்று கூறினார்கள். நான் ஏற்கனவே விழித்திருந்தேன். பிறகு நான் மஸ்ஜித் முபாரக்கிற்கு வந்தேன். பாங்கு சொல்லப்பட்டதும் ஹஸ்ரத் சாஹிப் அவர்களும் பள்ளிக்கு வந்தார்கள்.

ஹஸ்ரத் மியான் முஹம்மது சாஹிப் கோரி அவர்களின் மகன் மியான் வஸீர் கான் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:

1895 ஆம் ஆண்டு அல்லது 1896 ஆம் ஆண்டில் ஒரு நாள் ஹஸ்ரத் சாஹிப், மவ்லவி நூருத்தீன் சாஹிப், மவ்லவி அப்துல் கரீம் சாஹிப், மவ்லவி முஹம்மது அஹ்ஸன் சாஹிப் இன்னும் சில நண்பர்களும் அவர்களுடன் நானும் அமர்ந்து கோல்கம்ரா அதாவது வட்ட அறையில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அப்போது கீமாவுடன் கலந்த பாகற்காய்கள் கொண்டு வரப்பட்டன. ஹஸ்ரத் சாஹிப் அவற்றை ஒவ்வொன்றாக பகிர்ந்தளித்தார்கள். இறுதியில் இரண்டு பாகற்காய்கள் இருந்தன. எனக்கு யாரும் எதுவும் தரவில்லை. எனக்கு தரவில்லையே என்ற எண்ணம் எனது உள்ளத்தில் வந்தது. ஹஸ்ரத் சாஹிப் உடனடியாக இரண்டு பாகற்காய்களையும் எடுத்து எனக்கு முன்பாக வைத்தார்கள். நான் ஹுஸூர் நீங்களும் எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினேன். அதற்கு அவர்கள் இல்லை. நீங்கள் சாப்பிடுங்கள் என்று கூறினார்கள். ஒருவருக்கு ஒரு எண்ணம் தோன்றியவுடன் சில நேரங்களில் அவரது விருப்பத்தை நிறைவேற்றவும் அல்லது அவரது தப்பெண்ணத்தை அகற்றும் வகையில் உடனடியாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் செயலாற்றியிருப்பதை நம்மால் பார்க்க முடிகிறது.

மியான் முஹம்மது உமர் சாஹிபின் மகன் ஹஸ்ரத் மியான் அப்துர் ரஹீம் சாஹிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஒருமுறை கரம்தீன் அவர்கள் தொடுத்த வழக்கில் ஆஜராகுவதற்காக ஹுஸூர் குர்தாஸ்பூர் சென்றார்கள். ஒவ்வொரு நாளும் விசாரணை இருந்ததால் ஹுஸூர் அங்கேயே தங்கி விட்டார்கள். எனக்கு முதலில் சாப்பிடும் பழக்கம் இருக்கவில்லை. மாறாக ஹுஸூர் சாப்பிட்ட பிறகு தான் நான் சாப்பிட்டு வந்தேன். முழு உணவையும் சமைத்தவுடன் அவர்களுக்கு அனுப்பி விடுவேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்காகவும் விருந்தாளிகளுக்காகவும் இவர் உணவு சமைத்து வந்தார். ஆனால் முதலில் தனக்கென்று எதுவும் எடுத்துக் கொள்ளாமல் முழு உணவையும் அனுப்பி வைத்து விடுவார்கள். அவர் கூறுகின்றார்:

ஒருமுறை நான் ஹாஃபிஸ் ஹாமிது அலி சாஹிபிடம் எனது உணவை இங்கு கொண்டு வந்து தாருங்கள் என்று வலியுறுத்திக் கூறியிருந்தேன். ஆனால் அன்று காஜா கமாலுத்தீன் சாஹிப் மற்றும் பல சகோதரர்களும் இருந்தார்கள். அவர்கள் முழு உணவையும் சாப்பிட்டு விட்டார்கள். எனக்கென்று எதுவுமே எஞ்சியிருக்கவில்லை. நான் ஹாஃபிஸ் சாஹிபிடம் கோபப்பட்டேன். பிறகு அதே நிலையில் தூங்கி விட்டேன். காலையில் ஹுஸுர் அவர்கள் உணவு தயாராகி விட்டதா? என்று கேட்டார்கள். அதற்கு ஹாஃபிஸ் ஹாமிது அலி சாஹிப் அவர்கள், ஹுஸுரிடம் உணவு சமைப்பவர் இன்னும் எழவில்லை. அவர் நம்மிடம் கோபமாக இருக்கின்றார் என்று கூறினார்கள். சமையல் அறைக்கு முன்னால் இருந்த ஜன்னல் வழியாக ஹுஸுர் அவர்கள் மீண்டும் குரல் கொடுத்தார்கள். ஆனால் நான் பதில் கூறாமல் இருந்தேன். அதற்குப் பிறகு ஹுஸுர் குரல் கொடுத்தார்கள். நான் மீண்டும் பதில் கூறாமலேயே இருந்தேன். பிறகு ஹுஸுர் தாமாகவே என்னிடம் வந்து இன்று என்ன ஆகிவிட்டது? என்று கேட்டார்கள். உணவு எப்படி தயார் செய்யப் போகின்றீர்கள்? என்று கேட்டார்கள். அப்போது ஹாஃபிஸ் ஹாமிது அலி சாஹிப் அவர்கள் மீண்டும் ஹுஸுர் இவர் நேற்றிலிருந்தே வெறுப்படைந்துள்ளார். ஹுஸுர் சாப்பிட்ட பிறகு எஞ்சியிருக்கும் உணவை எனக்கு கொண்டு வந்து தாருங்கள் என்று இவர் என்னிடம் கூறியிருந்தார். ஆனால் உணவு எஞ்சியிருக்காததால் அவருக்கு நான் உணவு கொடுக்க முடியவில்லை என்று கூறினார். இதைக்கேட்ட ஹுஸுர் அவர்கள் இவருக்கு முதலில் உணவு கொடுத்து விடுங்கள். இவர் முதலில் உணவைப் பெற்றுக் கொள்ள மாட்டார் என ஹாஃபிஸ் சாஹிப் கூறினார்கள். அப்போது ஹுஸுர் இவருக்காக ஒரு லிட்டர் பால் கொண்டு வாருங்கள் என்று கூறினார்கள். தூங்குவது போல் பாவனை செய்து கொண்டிருந்த நான் உடனடியாக எழுந்து அரை மணி நேரத்திற்குள் உணவு தயாராகி விடும் என்று ஹுஸுரிடம் கூறினேன். நான் விரைவாக நெருப்பு மூட்டி அரைமணி நேரம் கழிவதற்கு முன்னரே உணவு தயார் செய்தேன். ஹுஸுர் அவர்களுக்கு உணவு கொடுக்கப்பட்ட போது நான் அங்கு சென்றேன். நீங்கள் என்ன மாயவித்தை செய்தீர்கள். இவ்வளவு விரைவாக உணவு தயாராகி விட்டதே என்று ஹுஸுர் என்னிடம் கேட்டார்கள். அதுபற்றி பிறகு கூறுவேன் என்று நான் அவர்களிடம் கூறினேன். மறுநாள் காலையில் மருதானி பூசுவதற்காக சென்ற சமயத்தில் ஹுஸுர் அவர்கள் என்னிடம் நேற்று என்ன மாயவித்தையை நிகழ்த்திக் காட்டினீர்கள் என்று கேட்டார்கள். எப்படி விரைவாக சமைத்தீர்கள் என்று கேட்டார்கள். ஹுஸுர் அப்போது தனியாக இருந்ததால் நான் அவர்களிடம் உண்மையில் வெறும் இறைச்சி மட்டும் வெந்து கொண்டிருந்தது. நான் ஏற்கனவே அதை அடுப்பில் வைத்து யார் பார்வையிலும் படாமல் அதை மூடி வைத்திருந்தேன். நீங்கள் உணவு தயாராகி விட்டதா என்று கேட்ட சமயத்தில் விரைவாக அதில் காய்கறிகளைப் போட்டு உடனடியாக உணவு தயார் செய்து விட்டேன் என்று கூறினேன். இதைக் கேட்டு ஹஸ்ரத் சாஹிப் சிரித்தார்கள். மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

ஷேக் முஹம்மது பக்ஸ் சாஹிப் அவர்களின் மகன் ஷேக் முஸ்தாக் ஹுஸைன் சாஹிப் அவர்கள் குஜ்ரான்வாலாவைச் சார்ந்தவர். இவர் அறிவிக்கின்றார்:

1900 ஆம் ஆண்டு அல்லது 1901 ஆம் ஆண்டு இந்த சம்பவம் நடந்தது. ஆண்டு மாநாடு நடைபெற்ற நாட்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மஸ்ஜிது முபாரக்கில் அமர்ந்திருந்தார்கள். ளுஹர் தொழுகைக்காக மக்கள் ஒன்றுகூடி இருந்தார்கள். ளுஹர் தொழுகைக்குப் பிறகு ஹுஸுர் சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு நபர் வெளியிலிருந்து வந்தார். அங்கு அமர்ந்திருந்த சகோதரர்களின் தலைகளை தாண்டியவாறு ஹுஸுருக்கு அருகில் சென்று விட்டார். இவ்வாறு எல்லாரையும் தாண்டியவாறு அவர் முன்னே செல்ல முற்பட்டதன் விளைவாக ஒரு சகோதரரின் தலைப்பாகை அவிழ்ந்து விட்டது. இவரது கால் பட்டு தட்டுத் தடுமாறியதால் அங்கு அமர்ந்திருந்த ஒருவரின் தலைப்பாகை அவிழ்ந்து விட்டது. அந்த நபர் ஹுஸுரிடம் முறையீடு செய்தவாறு ஒரு தாளில் அதுபற்றி எழுதி அதனை ஹுஸுருக்கு கொடுத்தார். ஹுஸுர் அதைப் படித்து விட்டு எழுந்து நின்றார்கள். வீட்டின் ஜன்னல் அருகே சென்று ஹஸ்ரத் நூருத்தீன் சாஹிப் அவர்களை அழைத்தார்கள். அவர்களிடம் சில விஷயங்களை பேசி விட்டு உள்ளே சென்று விட்டார்கள். மவ்லவி சாஹிப் மீண்டும் திரும்பி வந்து எழுந்து நின்றவாறு சொற்பொழிவாற்ற ஆரம்பித்தார்கள். அவர்கள் 10 அல்லது 15 நிமிடங்கள் சொற்பொழிவாற்றி இருப்பார்கள். ஆனால் அதன் சொற்கள் இன்னும் என் நினைவில் இருக்கின்றது.

**ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கூறினார்கள்:**

பாருங்கள். இன்று நான் உங்களுக்கு ஒரு அச்சமூட்டக்கூடிய விஷயத்தைக் கூறுகின்றேன். நானாக இதனைக் கூறவில்லை. மாறாக இவ்வாறு கூற நான் கட்டளை இடப்பட்டுள்ளேன். உங்களுக்கு நான் கூறிக் கொள்கின்றேன். இன்று நமது இமாம் துஆ செய்கின்றார்கள். காய்ந்த கிளைகள் என்னிடமிருந்து வெட்டி எறியப்பட வேண்டும் என்று துஆ செய்கின்றார்கள். அதாவது எவர் தனது ஈமானில் வலுவடைய விரும்பவில்லையோ அவர் என்னிலிருந்தும் வெட்டப்பட வேண்டும் என்று தாம் துஆ செய்வதை மக்களுக்கு தெரிவிக்கும்படி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு கட்டளையிட்டார்கள். பிறகு மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தன்னிடம் கூறியதாக முதல் கலீஃபத்துல் மஸீஹ் கூறினார்கள். நீங்கள் மற்றவர்களது தலையை வெட்டி விட்டு இறை நெருக்கத்தைப் பெற முடியாது. இறைநெருக்கம் அந்த இறைவனின் அருளால்தான் கிடைக்கும். மக்களது தலைகளைத் தாண்டிச் செல்வது, ஒருவருக்கு துன்பம் கொடுப்பது, ஒருவரை தடுமாறி விழ வைப்பது போன்ற செயல்களைச் செய்து விட்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது அருகில் சென்று விட்டதால் இறைநெருக்கம் கிடைக்காது. இறைநெருக்கம் அல்லாஹ்வின் அருளால் கிடைக்கும் என்று கூறினார்கள். அந்த அருளைத் தேட வேண்டும்.

இன்றைய நாட்களிலும் நான் பார்த்துள்ளேன். சில படித்த மக்கள் கூட எல்லோரையும் தாண்டி முன்னால் வர முயற்சி செய்கின்றார்கள். அவர்கள் முன்னெச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். எங்கு இடம் கிடைக்கின்றதோ அங்கு அமர வேண்டும். மற்றவர்களது துன்பத்திற்குக் காரணமாக ஆகி விடாதீர்கள்.

மாநாட்டு நாட்களில் கூட்டம் அதிகமாக இருப்பதால் முதலில் வருபவர்கள் முன்னால் வந்து அமர வேண்டும். அதனால் பின்னால் வரக்கூடியவர்கள் சுகமாக தமது இடத்தில் உட்கார முடியும். நடுவில் இடம் காலியாக இருப்பது தெரிந்து பின்னால் வரக்கூடியவர்கள் மக்களைத் தாண்டி வரும் அந்த செயலுக்கு இடம் கொடுக்கக் கூடாது.

**நாரோவியைச் சார்ந்த ஹஸ்ரத் மியான் குலாம் முஹம்மது சாஹிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

1904 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்த எளியவன் மற்ற அஹ்மதி சகோதரர்களான சவுத்திரி முஹம்மது சர்பராஸ் கான் மற்றும் இன்னும் பல பெயர்களை இவர் கூறியுள்ளார். இவர்கள் அனைவரும் அமிர்தசரஸிலிருந்து பேருந்தில் ஏறி பட்டாலா வந்து இறங்கி இரவு நேரத்தில் அங்குள்ள ஒரு பள்ளிவாசலில் தங்கினார்கள். பிறகு காலையில் காதியான் வந்து சேர்ந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ்மவ்வூது (அலை) ஒரு உயர்வான இடத்தில் நின்றவாறு சொற்பொழிவில் சூரா பக்கராவின் முதலாவது ருகூ, சூரா தாஹா ஆகியவற்றின் விளக்கவுரை கூறினார்கள். நஃப்ஸே அம்மாரா, நஃப்ஸே லவ்வாமா, நஃப்ஸே முத்மயின்னா ஆகியவற்றின் விளக்கம் கூறப்பட்டது. மனிதன் பாவங்களைச் செய்து கொண்டிருக்கும் நிலையில் நஃப்ஸே அம்மாரா அவனிடம் மிகைத்து நிற்கும். நஃப்ஸே லவ்வாமா பாவமும் செய்ய வைக்கும். நன்மைகளையும் செய்ய வைக்கும். சில நேரங்களில் நஃப்ஸே அம்மாரா மற்றும் நஃப்ஸே லவ்வாமா ஆகியவற்றிற்கு இடையில் சண்டையும் ஏற்படும். சில நேரங்களில் பாவங்கள் மிகைத்து நிற்கும். சில நேரங்களில் நன்மைகள் மிகைத்து நிற்கும். நன்மைகள் மட்டும் முழுமையாக மிகைத்து நின்று விட்டால், பாவங்கள் வெகுதூரம் வரை சென்று விட்டால் பிறகு நஃப்ஸே முத்மயின்னா ஒருவருக்கு கிடைத்துவிடும். அந்த நஃப்ஸ் கிடைத்துவிட்டால் பிறகு மனிதன் பாவங்கள் செய்யவே மாட்டான். நன்மைகளுடன் மட்டுமே அவனுக்குத் தொடர்பு இருக்கும். தீமையின் பக்கம் சாயும் ஆன்மாவும் தமக்கிடையில் சண்டை போட்டுக் கொள்ளும். சில நேரங்களில் இதில் ஒன்று வெற்றி பெற்றால் மற்றொரு சமயத்தில் மற்றொன்று வெற்றி பெறும். ஒன்று மேலே இருந்தால் மற்றொன்று கீழே இருக்கும். இதற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள், இறைவனது நல்லடியார்களுக்கு கற்பூரத்தின் சிறப்புத் தன்மைகள் அடங்கிய பானம் நிறைந்த குவளை குடிப்பதற்காக கொடுக்கப்படும் என்ற திருக்குர்ஆன் வசனத்தை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

எவ்வாறு கற்பூரம் கலந்த பானம் குளிர்ச்சியை உருவாக்குமோ அவ்வாறே நிம்மதியடைந்த ஆன்மா ஒருவருக்கு கிடைத்துவிட்டால் அவருக்கு நிம்மதி ஏற்படும். பிறகு இந்த வசனத்தை ஓதினார்கள்.

அந்த குவளைகளில் அவருக்கு வழங்கப்படும் பானங்களில் ஸன்ஜபீல் கலந்து இருக்கும். எவ்வாறு ஸன்ஜபீல் எனப்படும் இஞ்சி கலந்த பானம் சுவையாக இருக்குமோ அவ்வாறே நிம்மதிடைந்த ஆன்மா ஒருவருககு கிடைத்துவிட்டால் நன்மைகளின் இன்பம் அவருக்கு கிடைத்துவிடும். தீமையின் பக்கம் எண்ணமே வராது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கூற்றுக்களை சஹாபாக்கள் கேட்டு, அவற்றை நினைவில் வைத்திருந்தார்கள். பிறகு மிகச் சாதாரண சொற்களில் அதை எவ்வாறு பிறருக்கு எடுத்துக் கூறினார்கள். மற்றவர்கள் புரியும் படி, அவற்றை எவ்வாறு எடுத்துக் கூறினார்கள் என்பதை அறிவதற்காகவே நான் இவ்வாறான அறிவிப்பினை குறிப்பாக தேர்ந்தெடுத்துள்ளான்.

எனவே, இதே சிந்தனையுடன் இங்கு மாநாட்டிற்கு வந்திருக்கின்ற ஒவ்வொரு நபரும் மாநாட்டில் கலந்து கொண்டு இந்த சொற்பொழிவுகளைக் கேட்டு அதிலிருந்து பலன் பெற வேண்டும். ஆன்மீக அருளையும் பெற வேண்டும். பிறகு இந்த அறிவையும் ஆன்மீகத்தையும் பரப்பக்கூடியவர்களாக நாம் உருவாக வேண்டும்.

**மருத்துவமனையின் பொறுப்பாளராக இருந்த ஹஸ்ரத் டாக்டர் முஹம்மதீன் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

எனக்கு நினைவில் இருக்கின்றது. 1905 ஆம் ஆண்டு கடிதம் மூலம் நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்தேன், நேரடியாக அவர்களது கையில் 1905 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பைஅத் செய்தேன். ஆண்டு மாநாட்டின் போது இந்த பைஅத் நடந்தது. அப்போது எனக்கு வயது 20 இருக்கும். லாஹூர் மருத்துவக் கல்லூரியில் துணை அறுவைச் சிகிச்சை நிபுணருக்குரிய படிப்பு படித்துக் கொண்டிருந்தேன். நான் பைஅத் செய்த சமயத்தில் என்னுடன் பலரும் பைஅத் செய்தார்கள். ஒரு நீண்ட தார்ப்பாய் விரிக்கப்பட்டது. அதில் மக்கள் தங்களது கைகளை வைத்திருந்தார்கள். பைஅத் செய்தவர்களில் ஷேக் தன்வீர் சாஹிப் அவர்களும் இருந்தார்கள். ஷேக் சாஹிப் இதற்கு முன்பும் பைஅத் செய்திருந்தாலும் எங்களுடன் அவர் பைஅத்தில் கலந்து கொண்டார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கையில் ஷேக் சாஹிபின் கை இருந்தது. ஷேக் சாஹிபின் கை மீது எனது கை இருந்தது. ஹுஸுர் பைஅத்தின் சொற்களைக் கூறிக்கொண்டே இருந்தார்கள். பைஅத் செய்த நாங்கள் அனைவரும் அதை திரும்ப சொல்லிக் கொண்டே இருந்தோம். பைஅத்திற்குப் பிறகு ஹுஸுர் (அலை) அவர்கள் துஆ செய்தார்கள். மாநாடு முடிந்ததும் மாணவர்களாகிய நாங்கள் ஐந்து பேரும் திரும்பிச் செல்வதற்கு ஹுஸுரிடம் அனுமதி கோரினோம். அப்போது ஹுஸுர் அவர்கள் இங்கேயே இருங்கள் என்று கூறினார்கள். அல் வஸிய்யத் என்ற நூல் அப்போது தான் அச்சிட்டு வெளியிடப்பட்டு இருந்தது. அதன் ஒவ்வொரு நகலும் எங்களுக்கு வழங்கப்பட்டது. அத்துடன் ஹுஸுர் அவர்கள் நாங்கள் திரும்பிச் செல்வதற்காக அனுமதியையும் எங்களுக்குத் தந்தார்கள். அல் வஸிய்யத் என்ற நூலைப் பெற்றுக் கொண்டு நாங்கள் லாஹூருக்குத் திரும்பி வந்தோம். லாஹூர் மருத்துவக் கல்லூரியில் Hospital system நானும் படித்துக் கொண்டிருந்த சமயத்தில் 1906 ஆம் ஆண்டு எங்களுக்கிருந்த சில முறையீடுகளின் அடிப்படையில் நாங்கள் வேலை நிறுத்தத்தில் (Strike) ஈடுபட்டோம்; அதில் கலந்து கொண்டோம். இந்த வேலை நிறுத்தத்தில் அஹ்மதியாகளாகிய மருத்துவமனை மாணவர்களும் கலந்து கொண்டோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இது பற்றி தெரிய வந்த போது ஹுஸுர் அவர்கள் தங்களது ஒரு கண்டிப்பான கட்டளையை எங்களுக்கு அனுப்பி வைத்தார்கள். இப்படிப்பட்ட போராட்டங்களில் கலந்து கொள்வது இஸ்லாத்திற்கு எதிரான செயலாகும். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மரபுகளுக்கும் மாற்றமான செயலாகும். எனவே, நீங்கள் அனைவரும் கல்லூரி முதல்வர் சாஹிபிடம் மன்னிப்புக் கேட்டு மீண்டும் கல்லூரிக்குச் சென்று விடுங்கள் என்பதே அக்கட்டளையாகும். அத்துடன் ஹுஸுர் (அலை) அவர்கள் மருத்துவக் கல்லூரியின் முதல்வருக்கும் அவர்கள் கடிதம் எழுதினார்கள். அதில் எங்கள் ஜமாஅத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு தாங்கள் மன்னிப்பு வழங்கி அவர்களை மீண்டும் கல்லூரியில் சேர்த்து விடுங்கள் என்று எழுதப்பட்டிருந்தது. பிறகு அஹ்மதி மாணவர்களாகிய நாங்கள் ஐந்து பேரும் மன்னிப்புக் கேட்டு மீண்டும் கல்லூரியில் சேர்ந்தோம். மஸீஹின் ஐந்து சீடர்கள் என்ற தலைப்பில் லாஹூரிலிருந்து வெளிவந்த பைசா என்ற பத்திரிகை ஒரு கட்டுரையை வெளியிட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீதும் ஜமாஅத்தின் மீதும் பல ஆட்சேபனைகளை அவர்கள் செய்தார்கள். அதனால்

எந்த விளைவும் ஏற்படவில்லை. இறுதியில் மற்ற மாணவர்களும் மன்னிப்புப் கேட்டு மீண்டும் கல்லூரியில் சேர்ந்தார்கள்.

அவர் கூறுகின்றார்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பல கடிதங்கள் என்னிடம் இருந்தன. ஆனால் உலகப் போர் நடைபெற்ற சமயத்தில் அவை தொலைந்து விட்டன. போராட்டத்தில் ஈடுபடுவது தொடர்பாக நமது நிலை என்ன என்பதை நான் எனது குத்பாவில் தெளிவாக கூறிவிட்டேன்.

**சர்வோதையாவைச் சார்ந்த சவுத்ரி குலாம் ரசூல் சாஹிப் கூறுகின்றார்கள்:**

1907 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆண்டு மாநாட்டின போது இந்த சம்பவம் நடந்தது. காலையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உலாவுவதற்குச் செல்வார்கள் என்று எனக்கு தெரிந்தது. அதிகமாக கூட்ட நெருக்கடி ஏற்படும் போது ஹுஸுர் அவர்களைச் சுற்றி நாங்கள் கைகளைப் பிடித்தவாறு ஒரு வளையத்தை அமைத்துக் கொள்வது அப்போதைய வழிமுறையாக இருந்தது. ஹஸ்ரத் சாஹிப் எங்களுக்கு நடுவில் சென்று கெண்டிருப்பார்கள். நானும் எனது மற்ற சில சகோதரர்களுடன் நாம் காலையில் செல்லும் போது இறைவன் வாய்ப்பை வழங்கினால் கைகளைப் பிடித்தவாறு நாம் ஒரு வளையத்தை ஏற்படுத்துவோம் என்று கூறியிருந்தோம். அப்போது தான் நாம் ஹுஸுரை நன்றாக பார்க்க முடியும் என்றும் கூறினேன். மறுநாள் ஃபஜ்ர் தொழுகை முடிந்ததும் எல்லோரும் ஹுஸுர் அவர்களுக்காக காத்திருந்தவாறு பஜாரில் ஒன்று கூடினார்கள். ஹுஸுர் எந்த திசையிலிருந்து வெளியே வருவார்கள் என்பது யாருக்கும் முழுமையாக தெரியாமல் இருந்தது. இந்தப் பக்கமாகத் தான் ஹுஸுர் வெளியில் உலாவுவதற்காக வருவார்கள் என்று எண்ணியவாறு எந்த திசையிலிருந்தாவது சிறிதளவு ஓசை வந்தாலும் மக்கள் அந்தப் பக்கம் விரைவாக ஓட ஆரம்பித்தார்கள். சிறிது நேரம் வரை இது போன்ற அசைவுகள் இருந்து வந்தது. இறுதியில் ஹுஸுர் கிழக்குப் பக்கத்திலிருந்து ரேத்திசெல்லாவின் பக்கம் வெளியில் உலாவச் செல்வார்கள் என்று தெரிய வந்தது. ஏற்கெனவே, காத்திருந்த நாங்கள் ஆடைகளை இறுகக் கட்டிக்கொண்டு தயாராக இருந்தோம். எப்போது ஹுஸுர் பஜாரிலிருந்து வெளியில் வருவார்களோ அப்போதே கைகளை ஒன்று சேர்த்து வளையத்தை உருவாக்கி அவர்களை நம் மத்தியில் நடக்க வைக்க வேண்டும் என்று நாங்கள் தயாராகிக் கொண்டிருக்கும் போதே ஒரு மிகப் பெரும் கூட்டதின் நடுவில் ஹுஸுர் வருவதை நாங்கள் பார்த்தோம். இந்த பெரும் கூட்டம் எங்களது எண்ணத்தை மண்ணில் புதைத்து விட்டது. அந்த பெரும் கூட்டம் ஊர்ந்து ஊர்ந்து அந்த இடத்தைக் கடந்து சென்றது. ரேத்தி செல்லாவின் மேற்குப் பக்கத்திலுள்ள ஒரு மரத்தடியில் ஹுஸுர் நின்றவாறு அங்கு வந்த மக்களிடம் கை குலுக்கினார்கள். ஒருவர் ஹஸ்ரத் சாஹிபிற்காக நாற்காலி கொண்டு வரும்படி கூறினார். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் **அக்கீனா மக்கீனா** – மக்கள் அதிகமாக உன்னிடம் வருவார்கள். அவர்களைக் கண்டு களைப்படையாதீர்; சோர்வுக்குள்ளாகாதீர் என்று அல்லாஹ் என்னிடம் கூறியுள்ளான் என்று கூறினார்கள்.

இது அரபி இல்ஹாமாகும். எத்தகைய மகிமையுடன் இந்த இல்ஹாம் இன்றும் நிறைவேறி வருகிறது என்பதைப் பாருங்கள். பல்வேறு நாடுகளிலிருந்து அதிகமாக மக்கள் மாநாட்டு நிகழ்ச்சிகளைக் கேட்பதற்காக வருகின்றார்கள்.

**ஹஸ்ரத் மவ்லவி முஹம்மதீன் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

மாநாட்டின் போது ஹுஸுர் சொற்பொழிவு ஆற்றுவதை நான் பார்த்துள்ளேன். அவர்களுக்கென்று ஒரு குறிப்பிட்ட நேரம் ஒதுக்கப்படுவதில்லை. ஹுஸுர் அவர்கள் மரத்தாலான படிகளிலிருந்து இறங்கி வருவார்கள். மாநாட்டின் சொற்பொழிவில் மார்க்கத்திற்காக வாழ்க்கையை அர்ப்பணிக்கும்படி அவர்கள் கட்டளையிட்டார்கள். மஸ்ஜித் அக்ஸாவில் ஒரு மாநாட்டின் போது அவர்களுக்கென்று ஒரு நாற்காலி போடப்பட்டு இருந்தது. அதில் அமர்ந்து அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். சொற்பொழிவில் ஹுஸுர் (அலை) அவர்கள் கூறினார்கள்:

இங்கு இருக்கின்ற ஒவ்வொரு நபரும் எனது அடையாளமாக இருக்கின்றார்.

இப்போதும் கூட இந்த மாநாட்டில் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து வந்து இங்கு அமர்ந்திருப்பவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மைக்கான அடையாளமாக இருக்கின்றார்கள். இந்த உண்மைக்கான அடையாளமாகத் திகழ்வதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எந்த நோக்கத்திற்காக அனுப்பப்பட்டார்களோ அந்த நோக்கத்தை நிறைவேற்றுகின்ற தூய மாறுதலையும் நம்மிடம் நாம் உருவாக்க வேண்டும். ஹஸ்ரத் சாஹிபின் சொற்பொழிவில் ஒரு தொடர்ச்சி காணப்பட்டது. ஆரம்பத்தில் அவர்கள் குரல் மெதுவாகத்தான் கேட்கும். பிறகு உரத்த குரலில் அவர்கள் பேசினார்கள். சொற்பொழிவாளர்கள் தங்களது சொற்பொழிவின் போது தங்களது சில சொற்களை அழுத்தமாக கூறுவார்கள். ஹஸ்ரத் சாஹிபிடம் இந்த பழக்கம் இருக்கவில்லை. திருக்குர்ஆன் வசனத்தையும் சாதாரணமான நடையில் அவர்கள் ஓதுவார்கள். சொற்பொழிவின் போது அன்னார் கைகளாலோ அல்லது விரல்களிலாலோ சைகை செய்வதில்லை. அவர்கள் கைத்தடியைப் பிடித்தவாறு நிற்பார்கள். சில நேரம் இரண்டு கைகளையும் கைத்தடியில் வைத்திருப்பார்கள். அவர்களது சொற்பொழிவு உள்ளத்தை மிகவும் ஈர்க்கக் கூடியதாக இருக்கும். முற்றிலும் நிம்மதியான நிலையில் அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். அதைப் பார்க்கும் போது அது இயற்கையாகவே செயல்படும் ஒரு machine போன்று நமக்குத் தெரியும். வல்ல இறைவன் அந்த Machine தனது கைகளால் இயங்கச் செய்கின்றான் என்பதும் தெரியும்.

**ஹஸ்ரத் சூஃபி நபி பக்ஸ் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

1891 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ம் தேதி நடந்த மாநாட்டில கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 8 நபர்களாக இருந்தது. நானும் அதில் கலந்து கொண்டேன். காலை 10.00 மணி அளவில் தேநீர் அருந்திய பிறகு எல்லா சகோதரர்களும் மஸ்ஜித் அக்ஸா என்ற பெயரில் புகழ் பெற்று விளங்கும் பெரிய பள்ளிவாசலுக்குச் சென்று அங்கு ஒன்று கூட வேண்டும் என்று அறிவிப்பு செய்யப்பட்டது. கட்டளையை நிறைவேற்றும் வகையில் எல்லாருடனும் நானும் அங்கு சென்றேன். எனது பாக்கியம் நல்லதாக இருந்தது. ஆரம்ப நாளிலிருந்தே இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட அடியாரின் ஜமாஅத்தில் நான் இணைவதெற்கென்று இறைவன் இந்த நாளைத் தான் நியமித்திருந்தான். இன்று பார்ப்பது போன்று அன்று பள்ளிவாசல் விரிவானதாக இருக்கவில்லை. எல்லாரும் வந்த பிறகு ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் வந்தார்கள். ஆஸ்மானி பைஸலா என்ற நூலைப் படித்து அதனை பிறருக்குக் கேட்க வைப்பதற்காக ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். நான் ஹஸ்ரத் சாஹிபின் அருளுக்குரிய முகத்தையும் அவர்கள் அணிந்திருந்த ஆடையையும் பார்த்தேன். அப்போது எனது வியப்பிற்கு எல்லையே இல்லாமல் இருந்தது. ஏனென்றால், ஹுஸூர் அவர்களின் இதே அங்க அடையாளங்களையும் இதே ஆடையையும் நான் மாணவராக இருந்த சமயத்தில் கனவில் பார்த்துள்ளேன். பார்வையாளர்கள் மிகுந்த கவனத்துடன் ஆஸ்மானி பைஸலா என்ற நூல் படிக்கப்படுவதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். நானோ எனது உள்ளத்தில் அலை மோதும் எண்ணங்களில் மூழ்கியிருந்தேன். எனது மாணவப் பருவத்தில் நான் கனவில் பார்த்த அதே ஒளி நிறைந்த முகமே இது என்பதை நான் உறுதியாகத் தெரிந்து கொண்டேன்.

**ஹஸ்ரத் செய்யது ஜெய்னுல் ஆபிதீன் வலியுல்லாஹ் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

எந்த நாட்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது ( அலை) அவர்களுக்கு அவர்களது வஃபாத் தொடர்பான இல்ஹாம்கள் இறங்கிக் கொண்டிருந்ததோ அதே நாட்களில் நடைபெற்ற சம்பவம் இதுவாகும். அப்போது ஒருமுறை ஆண்டு மாநாடு மஸ்ஜித் அக்ஸாவில் நடந்தது. ஹுஸூர் அவர்கள் இந்த மாநாட்டில் தொழுகைக்குப் பிறகு சொற்பொழவு நிகழ்ற்றியவாறு சூரா ஃபாத்திஹாவின் விளக்கத்தைக் கூறினார்கள். உபூதிய்யத் அதாவது இறைவனை வணங்கும் அடியாராக இருப்பது பற்றி கூறியவாறு ஒரு அடியார் சரியான நிறத்தை பெறும் போது ஒரு இரும்பு நெருப்பில் போடப்பட்ட பிறகு நெருப்பின் நிறத்தை பெற்றுக் கொள்வது போன்றே இத்தகைய இறை அடியாரும் இறைவனின் நற்பண்புகளை தன்னகத்தே கொண்டவராக ஆகி விடுகின்றார். எவ்வாறு அந்த இரும்பின் துண்டு நெருப்பாக இல்லாமல் அதன் மெட்டீரியல் இரும்பாக இருக்கின்றதோ, மேலும் தற்காலிகமாக அதில் எவ்வாறு நெருப்பின் தன்மை ஊடுருவி விடுகின்றதோ அவ்வாறே இறை அடியாரும் உண்மையில் மனிதராகத் தான் இருப்பார். ஆனால், அவருக்குள்ளே இறைவனின் நற்பண்புகள் தனது பணியைச் செய்து

கொண்டிருக்கும். அப்படிப்பட்ட இறையடியாரின் எண்ணங்கள் அவருடைய எண்ணங்களாக இருப்பதில்லை. மாறாக, அவரது அசைவும் இருப்பும் இறைவனது செயல்களுடன் தொடர்புடையதாக இருக்கும் .

இப்படிப்பட்ட இறை அடியாராக மாறுவதற்கான முயற்சியை ஒவ்வொரு அஹ்மதியும் செய்ய வேண்டும். இதுதான் உண்மையான மூஃமினாக ஆவதற்குரிய அடையாளமாக இருக்கின்றது. இந்த வி-யங்களை உருவாக்குவதற்கே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்தார்கள்.

**ஹஸ்ரத் மவ்லவி முஹம்மது இப்ராஹீம் சாஹிப் பகாபூரி அறிவிக்கின்றார்கள்:**

1906 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆண்டு மாநாட்டின் சமயத்தில் ஹுஸுர் ( அலை) அவர்கள் தனது மரணத்தைப் பற்றி குறிப்பிட்டவாறு கூறினார்கள்.

இப்போது எனது மரணம் அருகில் இருக்கின்றது. நான் எனது ஜமாஅத்தின் நிலைமையைப் பார்க்கும் போது இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்னதாக பிறந்த ஒரு குழந்தையின் தாய், தான் மரணிக்க இருப்பதை அறிந்து அவளுக்கு இருக்கும் அதே கவலை தான் எனக்கும் இருக்கின்றது. ஆனால், எனக்கு இறைவனின் வாக்குறுதிகள் மீது முழுமையான நம்பிக்கை இருக்கின்றது. அவன் எனது ஜமாஅத் வீணாகிப் போக விடமாட்டான். இது எனது உள்ளத்திலுள்ள நிம்மதியாகும்.

அல்லாஹ் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத் நாள்தோறும் வளர்ந்து வருகிறது; வளர்ந்து கொண்டே செல்கிறது. ஆனால், எண்ணிக்கையில் நாம் வளர்ச்சி அடைவது மட்டும் போதாது. நாம் நமது ஈமானைப் பற்றி கவலைப்பட வேண்டும். நமது ஆன்மீகத்தைப் பற்றியும் கவலைப்பட வேண்டும். இதிலும் வளர்ச்சியடைய முயற்சிகளைச் செய்யவேண்டும். நாம் நமது ஈமானையும் பாதுகாப்பதற்காக எல்லா சமயத்திலும் இந்த ஈமான் நமது சந்ததிகளின் ஈமானையும் பாதுகாப்பதற்காக எல்லா சமயத்திலும் இந்த ஈமான் நமது எல்லைக்குட்பட்ட ஒன்றாக மட்டும் இல்லாமல் நமது அடுத்த தலைமுறையிலும் நாம் இந்த ஈமானை உருவாக்குபவர்களாக திகழ வேண்டும். இதற்காக நல்ல முன்மாதிரிகளை நிலைபெறச் செய்யுங்கள். அதன் மூலமாக நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் துஆக்களிலிருந்தும் எப்போதும் அருளைப் பெறுபவர்களாக நாம் ஆகி விடுவோம். நாம் ஹுஸுர் (அலை) அவர்களின் கவலையை அகற்றுபவர்களாக நாம் ஆகி விடுவோம். இந்த வி-யங்கள் தான் நம்மை அல்லாஹ்வுடனும் நமது தொடர்பின் முன்னேறும்படி செய்யும்.

சஹாபாக்களின் சம்பவங்களை நான் தொகுத்துக் கூறுவதற்கான காரணம் நமக்கு முன்னால் சில நல்ல முன்மாதிரிகள் இருக்க வேண்டும் என்பதற்காகவேயாகும். பல்வேறு வழிமுறைகள் மூலம் சஹாபாக்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் எவ்வாறு பேரன்பு கொண்டிருந்தார்கள்? எப்படிப்பட்ட ஆன்மீகப் புரட்சியை உருவாக்குவதற்காக இந்த மின்மினிப் பூச்சிக்கள் ஒளிதரும் தீபத்திற்கும் அருகில் ஒன்று கூடியிருந்தன? என்பது நமக்குத் தெரிய வரும். அல்லாஹ் நம்மை நமது ஈமானில் முன்னேறும்படி செய்யவானாக! அல்லாஹ்வின் வெறுப்பிற்குக் காரணமாக அமையும் எந்த செயலையும் நாம் செய்யாமல் இருப்போமாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT KARISRUHE, GERMANY**
**ON 24.06.2011**

Translated by : **Maulavi M. RAFEEQ AHMAD H.A.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**